**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.10/2026**

IN

**அசல் வழக்கு எண்.343/2015**

கனித்தாய் (எ) கனியம்மாள் .... மனுதாரர்/7 ம்பிரதிவாதி

/எதிர்/

1. செல்வராஜ் ...1 ம் எதிர்மனுதாரர்/வாதி
2. ராமாத்தாள்
3. அன்னத்தாய்
4. மகாராஜன்
5. சீனிப்பாண்டி
6. அன்னராஜ்
7. வள்ளித்தாய் ....2 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது 18.04.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.கிளாஸ்டின் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 மற்றும் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.தமிழரசன் அவர்கள் ஆஜராகியும், 5, 6 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத் தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், மனு, 1 முதல் 4 மற்றும் 7 எதிர்மனுதாரர்கள்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.04.22 18:51:40 +0530

தரப்பு எதிருரை மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1(a)-ன் கீழ் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை இவ்வழக்கில் ஏற்றுக் கொள்ளக் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 7ம் பிரதிவாதி என்றும், பிரதான வழக்கில் மனுதாரர் தரப்பில் சாட்சிய விசாரணைக்கு வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர்களின் கட்சி பொய்யானது என நிரூபணம் செய்து கொள்ள, மனுதாரர் சாட்சியம் அளிப்பதில் இத்துடன் தாக்கல் செய்யும் மனுவில் குறிப்பிட்டுள்ள 29.09.2008 தேதிய பதிவு கிரைய ஆவணம் மற்றும் பட்டாக்கள் 767, 1197 மற்றும் சொட்டுநீர் பாசன ஆவணங்கள் எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்ய விடுபட்டுவிட்டது என்றும், மேற்படி தவறு வேண்டுமென்று ஏற்பட்டதில்லை என்றும், தன்னை அறியாமல் தெய்வாதீனமாக ஏற்பட்டுவிட்டது என்றும், மனு ஆதரவுகள் வேறு ஆவணங்களுடன் கலந்து இருந்து வந்ததை, தற்போது மிகவும் சிரத்தை எடுத்து தேடி எடுத்து தனது முதல்நிலை சாட்சியத்தில் தாக்கல் செய்வதை முன்னமே தாக்கல் செய்யாததினால் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து "ரிசிவ்" செய்துகொள்ள வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும், ஆகையால், இவ்வழக்கின் கட்டாய விசாரணையின்போது இதன் மனுவில் கண்டுள்ள ஆதரவுகளை முன்னமே தாக்கல் செய்யாத தவறுதலையும் காலதாமதத்தையும் மன்னித்து மேற்படி ஆதரவுகளை வாங்கி அங்கீகரித்துக் கொள்ள உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.22 18:51:47 +0530

2) **<u>1வது எதிர்மனுதார்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>**:-

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் பொய்யானவை என்றும், அதனை இந்த மனுதாரரே ஐயமின்றி நிரூபித்துப்போக கடமைப்பட்டுள்ளார் என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள 1வது ஆவணமானது சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், தபசில் சொத்துக்களில் எதிர்மனுதாரருக்கு பாதி பங்கு உள்ள நிலையில், எதிர்மனுதாரரின் பங்கினையும் சேர்த்து மனுதாரர் கிரையம் பெற்றது எதிர்மனுதாரரின் பங்கினை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும், அதேபோல் தபசில் சொத்திற்கு எந்த விதத்திலும் சம்பந்தம் இல்லாத 2, 3 ஆவணமானது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை மற்றும் 4, 5 ஆவணங்களில் எந்த விதமான முத்திரையும் இல்லாததால் அந்த ஆவணம் மனுதாரரால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதால் அந்த ஆவணமும் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்றும், எனவே, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>2 முதல் 4 மற்றும் 7வது எதிர்மனுதார்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>**:-

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் பொய்யானவை என்றும், அதனை இந்த மனுதாரரே ஐயமின்றி நிரூபித்துப்போக கடமைப்பட்டுள்ளார் என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள 1வது ஆவணத்தின்படி எந்தவிதமான உரிமையும் கிடைக்கக் கூடியதில்லை என்றும், தபசில் சொத்துக்களில் எதிர்மனுதாரர்களுக்கு சட்டப்படியான சரிபாதி உரிமை உள்ள நிலையில் எதிர்மனுதாரர்களுக்கு தெரியாமல் 4, 5 பிரதிவாதிகளிடம் மனுதாரர் கிரையம் பெற்றது

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.22 18:51:53 +0530

எதிர்மனுதாரர்களின் பங்கு பாகத்தை பொறுத்து சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், அது இந்த எதிர்மனுதாரர்களை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும், மேலும், இந்த மனுதாரர் தாக்கல் செய்துள்ள 2, 3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே நம்பருக்கும், தபசில் சொத்தில் உள்ள சர்வே நம்பருக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லாததால் மேற்படி ஆவணங்கள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், அதேபோல் மனுதாரர் தாக்கல் செய்துள்ள 4, 5 ஆவணங்களில் தபசில் சொத்திற்கான சர்வே நம்பரோ, அதிகாரியின் கையொப்பமோ, முத்திரையோ எதுவும் இல்லை என்றும், சொட்டுநீர் பாசனம் அமைக்க கடன் பெற்ற விவரமோ எதுவும் இல்லை என்றும், எனவே மேற்படி ஆவணமானது மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டவை என்பதால் அவை சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், எனவே, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று 2 முதல் 4 மற்றும் 7 வது எதிர்மனுதார்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

5) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 1 முதல் 4 மற்றும் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

6) அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மனுதாரரால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை நீதிமன்றத்தில் விரைந்து தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தற்பொழுது அசல்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.04.22 18:51:59 +0530

வழக்கில் கூடுதல் ஆவணங்களாக ஏற்றுக்கொள்ளக்கோரி தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

8) மனுதாரரால் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தை விரைந்து தாக்கல் செய்யாதற்கான காரணத்தை இம்மனுவில் தெரிவிக்கவில்லை.

9) மேலும், இம்மனுவின் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள 1வது ஆவணமானது சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், தபசில் சொத்துக்களில் எதிர்மனுதாரருக்கு பாதி பங்கு உள்ள நிலையில், எதிர்மனுதாரரின் பங்கினையும் சேர்த்து மனுதாரர் கிரையம் பெற்றது எதிர்மனுதாரரின் பங்கினை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும், அதேபோல் தபசில் சொத்திற்கு எந்த விதத்திலும் சம்பந்தம் இல்லாத 2, 3 ஆவணமானது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை மற்றும் 4, 5 ஆவணங்களில் எந்த விதமான முத்திரையும் இல்லாததால் அந்த ஆவணம் மனுதாரரால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதால் அந்த ஆவணமும் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்றும் இம்மனுவுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

10) மேலும், இம்மனுவின் 2 முதல் 4 மற்றும் 7வது எதிர்மனுதார்கள் தரப்பில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள 1வது ஆவணத்தின்படி எந்தவிதமான உரிமையும் கிடைக்கக் கூடியதில்லை என்றும், தபசில் சொத்துக்களில் எதிர்மனுதாரர்களுக்கு சட்டப்படியான சரிபாதி உரிமை உள்ள நிலையில் எதிர்மனுதாரர்களுக்கு தெரியாமல் 4, 5 பிரதிவாதிகளிடம் மனுதாரர் கிரையம் பெற்றது எதிர்மனுதாரர்களின் பங்கு பாகத்தை

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.04.22 18:52:05 +0530

பொறுத்து சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், அது இந்த எதிர்மனுதாரர்களை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும், மேலும், இந்த மனுதாரர் தாக்கல் செய்துள்ள 2, 3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே நம்பருக்கும், தபசில் சொத்தில் உள்ள சர்வே நம்பருக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லாததால் மேற்படி ஆவணங்கள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், அதேபோல் மனுதாரர் தாக்கல் செய்துள்ள 4, 5 ஆவணங்களில் தபசில் சொத்திற்கான சர்வே நம்பரோ, அதிகாரியின் கையொப்பமோ, முத்திரையோ எதுவும் இல்லை என்றும், சொட்டுநீர் பாசனம் அமைக்க கடன் பெற்ற விவரமோ எதுவும் இல்லை என்றும், எனவே மேற்படி ஆவணமானது மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டவை என்பதால் அவை சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும் இம்மனுவுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

11) இருப்பினும், அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.3 ன் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக நிலுவையில் இருப்பதால் மனுதாரரால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் இவ்வழக்கிற்கு சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கு அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மனுதாரரால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ள ஆட்சேபணைகள் குறித்து ஆவணங்கள் குறியீடு செய்யப்படும் சமயத்திலோ அல்லது தீர்ப்புரை பகரப்படும்போது இந்நீதிமன்றத்தால் பரிசீலிக்கக்கூடியதாகும். தற்போது, இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்விட கஷ்ட, நஷ்டமும் ஏற்படப்போவதில்லை.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.04.22 18:52:10 +0530

12) ஆகையால், மனுதாரர் தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களானது நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

13) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து இம்மனுவானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படத்தக்கது என்று இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**<u>14) இறுதியாக</u>**

இம்மனுவானது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு (Subject to Proof and Relevancy) ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 1ம் எதிர்மனுதாரருக்கு ரூ.250/-ம் மற்றும் 2 முதல் 4 மற்றும் 7வது எதிர்மனுதாரர்களுக்கு ரூ.250/-ம் (மொத்தம் ரூ.500/-) நேரடியாக 28.04.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 28.04.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.22 18:52:17 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :-**

**- இல்லை -**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.22 18:52:25 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சங்கரன்கோவில்.**

**மு.மா.உ. நீதிமன்றம்,**

**சங்கரன்கோவில்,**

I.A.No.10/2026
in
O.S.No.343/2015

**உத்தரவு (Draft / Fair)**

**நாள்** : 22.04.2026